**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| வழக்கு எண் | OS | 25 | of | 2018 |
|---|---|---|---|---|

**2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 6-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.1 -வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **அச்சுதநாராயணன்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-06.01.2026**

**வா.சா.-1**

**<u>குறுக்கு விசாரணை- (2 ம் பிரதிவாதி தரப்பில் )</u>**

நான் வழக்கில் 1ம் வாதி. இறந்த நபர் என் மகன் வெங்கட்ராகவன். 02.06.2012 அன்று விபத்து நடந்தது. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. காலையில் நடந்தது என்று நினைக்கிறேன். தொலைபேசி மூலம் தகவல் கிடைத்து சென்றேன். மதியம் சுமார் 2 மணிக்கு தகவல் கிடைத்தது. நான் மாலை 4.30 மணிக்கு சென்னை வந்தேன். என் மகன் உடனிருந்தவர்கள் விபத்து நடந்த விதம் பற்றி என்னிடம் தெரிவித்தார்கள். என் மகன் சென்னையில் தங்கியிருந்தார். நான் வேலூரில் இருந்தேன். என் மகன்

அவரின் நண்பர்களுடன் ரூம் எடுத்து தங்கியிருந்தார். சுமார் 5 பேர் தனி வீட்டில் குடியிருந்தார்கள். என் மகன் சுமார் 3 ஆண்டுகள்அ ந்த இடத்தில் வசித்து வந்தார். அது வாடகை வீடாகும். வாடகை ஒப்பந்தம் இருந்ததா என்று தெரியவில்லை. என் மகன் அந்த குறிப்பிட்ட இடத்தில் வசித்து வந்தார் என்பதை காட்ட ஆவண ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. விபத்து சம்பந்தமாக நான் தான் புகார் கொடுத்தேன். புகாரை போலீசார் எழுதினார்கள். நான் அதில் கையெழுத்து போட்டேன். புகாரில் உள்ள விவரங்கள் என் மகனின் நண்பர்கள் என்னிடம் சொன்ன விவரங்கள் ஆகும். பிரதிவாதியின் வீடு என் மகன் குடியிருந்த வீட்டிற்கு பக்கத்து வீடு என்பதால் சரியாக பராமரிக்கப்படாத காரணத்தினால் விபத்து ஏற்பட்டதாக சொல்லியிருக்கிறேன். விபத்து குறித்து போலீசார் என்னையும் என் மகனின் நண்பர்களையும் விசாரணை செய்தார்கள். என் மகன் குடியிருந்த வீட்டின் உரிமையாளா் யார் என்று தெரியவில்லை. போலீசார் மேற்படி உரிமையாளரை விசாரணை செய்தார்களா என்று தெரியவில்லை. விபத்து பிரதிவாதி கட்டிவந்த வீட்டின் அருகே தான் நடந்தது என்பதை நிரூபிக்க ஆவண ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் போலீசார் ஆதாரங்களை திரட்டியுள்ளனர். நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கை வா.த.சா-ஆ.2 ல் பிரதிவாதிகளின் பெயர்கள் இடம்பெறவில்லை என்றால் சரிதான். கட்டிட வேலை ஆட்கள் பெயர்கள் உள்ளது. அப்போது

பிரதிவாதிகளின் பெயர்கள் தெரியாது. போலீசார் புலன் விசாரணை செய்து இறுதி அறிக்கை வா.த.சா.ஆ.4 தாக்கல் செய்துள்ளனர். வா.த.சா.ஆ.4 முழுமையான ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. இறுதி அறிக்கையிலும் பிரதிவாதிகளின் பெயர்கள் இடம் பெறவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.4 குற்ற பத்திரிக்கையில் வீட்டின் உரிமையாளர் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் அது பற்றி தெரியாது. நான் குற்றவியல் வழக்கில் இதுநாள் வரையில் விசாரிக்கப்படவில்லை. குற்றவியல் வழக்கு என்னவானது என்று தெரியவில்லை. குற்றவியல் வழக்கு போதுமான சாட்சியம் இல்லை என்று தள்ளுபடியாகிவிட்டது என்றால் அது பற்றி தெரியாது. பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த குற்றவழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், இந்த பிரதிவாதிகளின் வேலை ஆட்கள் தான் அப்போது கட்டிட வேலை செய்தார்கள் என்பது நிரூபிக்கப்படவில்லை என்றும் சொன்னால் அது பற்றி தெரியவில்லை. விபத்து நடந்தவுடன் என் மகன் இந்து மிஷன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். விபத்து பதிவேடு நகல் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. பின்னிட்டு குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். விபத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமான வீட்டிலோ அல்லது அதன் அருகில் உள்ள இடத்திலோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ. 2 முதல் தகவல் அறிக்கையில் விபத்து நடந்த நேரம் 20.30 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது இரவு நேரம்

என்பதால் பிரதிவாதிகளின் ஆட்கள் கட்டிட வேலை செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. பொய்யான புகார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். பிரதிவாதிகள் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை வா.த.சா.ஆ.8 ஆகும். அதில் பிரதிவாதியின் மனைவி கையொப்பம் இட்டு பெற்றுக்கொண்டுள்ளார். இந்த விவரத்தை என் வழக்கறிஞர் என்னிடம் சொன்னார். வா.த.சா-ஆ.8 ல் உள்ள கையொப்பம் பிரதிவாதி சம்பந்தப்பட்டவர்களுடையது அல்ல என்றால் அதை மறுக்கிறேன். பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு சென்று சேரவில்லை என்றும் அதனால் தான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அளித்துள்ள பதில் அறிவிப்பில் சம்பவத்தை முற்றிலும் மறுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கில் விபத்தை நிரூபிக்க போதுமான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மகன் Renault Nissan Oragadam கார் கம்பெனியில் பொறியாளராக வேலை பார்த்தார். என் மகன் அப்போது மாத சம்பளமாக ரூ.86,000/- பெற்று வந்தார். என் மகனின் வருமான சான்றிதழ் வா.த.சா.ஆ.21 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மே 2012 ற்கான சம்பள சான்றிதழின் படி மாத சம்பளம் ரூ.87,200/- ஆகும். ஆனால் பிடித்தங்கள் போக என் மகன் கையில் பெற்ற சம்பளம் ரூ.38,900/- ஆகும். பிரதிவாதிகளிடமிருந்து பணம் பறிக்க வேண்டீ அதிகப்படியான இழப்பீடு கோரியிருக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் இடையில் சம்பந்தமில்லை என்றால் ் சரியல்ல. பிரதிவாதிகள்

இழப்பீடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. வேறு எங்கோ நடந்த விபத்தை இந்த பிரதிவாதிகளின் வீட்டின் அருகே நடந்ததாக சொல்லி பொய் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :-**

இல்லை.

T
CHANDRASEKARAN

Digitally signed by T
CHANDRASEKARAN
Location: Principal
District Judge,
Chengalpattu